


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | நவம்பர் 15 2018 | புரட்சி 17 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00


## பார்ப்பன–பனியா சுரண்டலுக்கு எதிராக

# பெரியார் வழியில் ‘சூத்திர’ புரட்சி தொடங்க வேண்டும்

## ஆய்வாளர் காஞ்சா அய்லய்யா முழக்கம்

இந்தியா பார்ப்பனர்-பனியாக்கள் பிடியில் தான் நீடித்துக் கொண்டிருக்கிறது. மோடி ஆட்சியில் இது மேலும் வலிமை பெற்று விட்டது. பெரியார் தொடங்கி வைத்த ‘சூத்திரர்கள்’ புரட்சி நடந்தாக வேண்டும் என்று சமூக இயல் ஆய்வாளரும் இந்துத்துவ பாசிச எதிர்ப்பாளரும் பேராசிரியருமான காஞ்சா அய்லய்யா அறைகூவல் விடுத்தார்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கம் நடத்திய “கருத்துரிமை போற்றுதும் - எழுத்தாளர்கள் கலைஞர்களின் ஒன்றுகூடல்” - 2018 அக். 19 அன்று காமராசர் அரங்கில் காலை முதல் இரவு வரை நடந்தது. பேராசிரியர் காஞ்சா அய்லய்யா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பேசினார். பெரியாருக்கு வணக்கம்; அம்பேத்கருக்கு வணக்கம் என்று ஆங்கிலத்தில் உரையைத் தொடங்கிய அவர், இந்தியாவிலேயே மனுவாதிகளுக்கு எதிராக சூத்திரர்களுக்கும் பெண்களுக்கும் கல்வி நிலையங்களைத் திறந்த சாவித்திரி பாய் புலே, பெரியார் அம்பேத்கர், மார்க்ஸ் படங்கள் இதுபோன்ற மாநாடுகளில் இடம் பெற வேண்டும் என்று பலத்த கரவொலிகளுக்கிடையே தெரிவித்தார். மோடியின் ‘தேசியம்’ - தேசபக்தி மூன்று கோட்பாடுகளை முன்னிறுத்துகிறது. ஒன்று பசுப் பாதுகாப்பு; ஏன் என்று கேட்டால் பசு பால் தருகிறது; அது தாய்ப்பாலைவிட சிறந்தது என்கிறார்கள்; பசுவைவிட கோடானுகோடி மக்களுக்கு பால் வழங்குவது எருமைதான். எருமைப் பால் தான் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தாக இருக்கிறது. பசு வெள்ளை; எனவே பசுவை புனிதம் என்கிறார்கள். எருமை கருப்பு; அது நமக்கான நிறம். அந்த எருமையின் நிறத்தைத்தான் பெரியார் சீருடையாக தனது தொண்டர்களுக்கு தேர்வு செய்தார்.

மோடியின் தேசியத்தின் மற்றொரு அடையாளம் சைவ உணவு. சைவ உணவை மட்டும் சாப்பிட்டால் நமது இராணுவத்தினர் கடும் குளிர் பிரதேசத்தில் தங்கி எல்லையைக் காப்பாற்ற முடியுமா? இவர்கள் தேசபக்திக்கு அடையாளமான தேசத்தைக் காப்பாற்றும் இராணுவ வீரர்களுக்கே அசைவ உணவும் மாட்டுக்கறியும்தான் தேவைப்படுகிறது. ஆனால் இவர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டால் அடித்துக் கொல்லுகிறார்கள். தேசபக்தி பேசும் இந்த பார்ப்பன-பனியாக்கள் ஏன் இராணுவத்தில் சேருவதில்லை? எல்லையில் சிப்பாய்களாக துப்பாக்கி ஏந்தி போராடுகிறவர்களாக வருவதில்லை?

இவர்கள் தேசியத்தின் மூன்றாவது அடையாளம் ‘யோகா’. யோகா செய்தால் நாட்டின் வேலை வாய்ப்பு, பொருளாதார நெருக்கடிகள் தீர்ந்து விடுமா? ஆட்சியின் தோல்விகளை மறைக்கவே ‘யோகா’வை பிரபலப்படுத்துகிறார்கள்.

இந்தியா பார்ப்பனர், பனியா, காயஸ்தா, கத்ரியா என்ற சமூகத்தின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. மோடியும் அமீத்ஷாவும் பனியாக்கள். அவர்கள் வளர்த்துவிடும் தொழிலதிபர்கள் பனியாக்கள்தான். காமராசர் இப்போது உயிரோடிருந்தால் டெல்லியில் ஒரு பதவியைக்கூட பெற முடியாது. காரணம் அவர் ஒரு பார்ப்பனரோ பனியாவோ அல்ல; அவர் ஒரு ‘சூத்திரர்’.

இந்த சமூகத்தில் உழைப்பு சக்திகளாக பொருளாதார வளங்களைக் கொண்டு வந்து சேர்ப்பது எல்லாம் சூத்திரர்களும் தலித்துகளும் தான். நாட்டின் செல்வமும் வளமும் பார்ப்பன-பனியா காயஸ்தாக்களிடம்தான் குவிந்து கிடக்கிறது. சொத்துக்கள் பனியாக்களிடமும் கோயில்களிடமும் பார்ப்பன ஆதரவோடு எப்படி குவிந்தது என்பதை விளக்கி நான் ஒரு நூல் எழுதியுள்ளேன். அந்த நூலில் ‘சமூகத்தின் கடத்தல் தொழில்காரர்கள்’ (Social Smugglers) என்று இவர்களைக் குறிப்பிட்டிருந்தேன். இன்றைக்குத் தேவை - பெரியார் கூறிய சூத்திரர்களுக்கான உரிமைப் போராட்டம் தான்! சூத்திரர் - பஞ்சமர் இணைந்து போராட வேண்டும்.

“இந்தியும் சமஸ்கிருதமும் நமக்குப் பயன்படாத மொழிகள். அவற்றை ஜக்கி வாசுதேவ் போன்ற சாமியார்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும். காஞ்சா அய்லயா என்கிற என்னுடைய பெயரை இப்போது காஞ்சா அய்லய்யா ஷெப்பர்டு என்று நான் ஆங்கிலத்தில் மாற்றிக் கொண்டிருக்கிறேன். ஷெப்பர்டு என்று சொன்னால் ஆடுமேய்ப்பவன் என்று பொருள். ஆனால் அந்த ஷெப்பர்டு என்பது ஒடுக்கப்பட்டவர்களின் குறியீடாக உள்ளது. நான் ஷெப்பர்டு என்கிற பெயரை வைத்துக் கொண்டதும் எனக்கு ஏதாவது நேர்ந்தால் அமெரிக்க நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவோம் என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம் ஷெப்பர்டு என்பதன் பொருள் என்ன என்பதை அனைத்து நாடுகளும் அறிந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் அந்தப் பெயர் இருப்பதால் அவர்களுக்கு அதனுடைய பொருள் புரிகிறது. ஆனால் இங்கே இருக்கிற சதுர்வேதி, திரிவேதி, துவிவேதி என்கிற சமஸ்கிருத பார்ப்பனப் பெயர்களுக்கு ஏதாவது நேர்ந்தால் யாரும் அதைக் கண்டுகொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அதன் பொருள் யாருக்கும் புரியாது. அது இந்தியாவில் இருக்கிற ஒரு சில பேருக்கு மட்டுமே புரிந்த சொற்களாகவே உள்ளன. ஆங்கிலம் படிப்பது அவசியம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு வங்கத்தில் இடதுசாரி ஆட்சி ஆங்கிலக் கல்வியை ஒழித்து தவறு செய்தது; அதனால் வங்காளப் பார்ப்பனர்கள் மட்டும் ஆங்கிலம் படித்து முன்னேறி விட்டார்கள்.

சபரிமலையில் எல்லா வயது பெண்களையும் அனுமதிக்கலாமா என்று மிகப் பெரிய சர்ச்சை நடக்கிறது. ஆனால் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் மிகச் சரியான நிலை எடுத்து செயல்பட்டு வருகிறார். ஏனென்றால்அவர் கேரளாவில் பிறந்த சீர்திருத்தவாதியான நாராயணகுருவின் சீடராக செயல்படுகிறார். ஏற்கனவே ஆலயங்களில் அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் மிக முக்கியமான நடைமுறையை மேற்கொண்டவர். இதெல்லாம் அந்த மண்ணில் பிறந்த நாராயணகுரு போன்ற சீர்திருத்தவாதிகளின் செயல்பாட்டால் வருகின்ற விளைவுகள்தான். சபரிமலைக்குப் பெண்கள் செல்வதற்கு அவர்களின் மாதவிலக்கு தடையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதே போன்று பருவ நிலையை எய்திய ஆண்களுக்கு விந்தணுக்கள் வெளிப்படுவதில்லையா? அதுமட்டும் ஐயப்பனுக்கு ஏற்புடையதா? இதைஎல்லாம் ஒரு அறிவியல் பார்வையோடுநாம் பார்க்க வேண்டும். அப்படி இல்லாதவர்கள் தான் இதைக் காரணம் காட்டி பெண்களை தடை செய்கிறார்கள்.

ஆண்களிடம் விந்தணுக்கள் ஏற்படாவிட்டால் பெண்களுக்கு கரு எப்படி உருவாகும்? இவர்களையெல்லாம் எதிர்த்துப் போராட நாம் ஓரணியில் திரள வேண்டும். தெலுங்கானாவில் நாங்கள் வெகுமக்கள் இயக்கம் ஒன்றைத் தொடங்கி இருக்கிறோம். அது நல்ல பயனைத் தந்துள்ளது. அதன் மூலமாக நாங்கள் சோஷலிச நல்வாழ்வு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். இதே போன்ற ஒரு இயக்கம் இங்கேயும் தொடங்கப்படுவது அவசியம் என்று நான் கருதுகிறேன். வெகுமக்கள் இடதுசாரி இயக்கம் என்பதாக அது இருக்க வேண்டும். வெகுமக்களை ஒன்றிணைப்பதன் மூலம்தான் அரசியல் போராட்டத்தில் வெற்றி பெற முடியும். இந்தத் தருணத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாவோயிஸ்ட்டுகள் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக முறைக்கு திரும்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நேபாளத்தில் அவர்கள் மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தினார்கள். இருப்பினும் ஆயுதப் புரட்சிக்கு பதிலாக ஜனநாயகபாதைக்கு திரும்பி வந்து ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறார்கள். அதுபோன்ற நிலையை இந்தியாவில் உருவாக்க ஆயுதங்களை கைவிட்டு மாவோயிஸ்ட்டுகள் ஜனநாயக முறைக்கு திரும்ப வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மக்களுக்கு கல்வியறிவை அடிப்படை ஆதாரமாகக் கருதி அதற்கு முக்கியத்துவம் அளித்த சாவித்திரிபாய், ஜோதிபா பூலே, பெரியார், அம்பேத்கர், மார்க்ஸ் என்று ஆளுமைகளை நீங்கள் வரிசைப்படுத்தி வைக்க வேண்டும். சூத்திரர் - பஞ்சமர் உரிமைப் போராட்டத்தை சமூகக் கடத்தல்காரர்களான பார்ப்பன-பனியாக்களக்கு எதிராகத் தொடங்க வேண்டும்” என்றார், காஞ்சா அய்லய்யா. ●

## ‘குடிஅரசு’ வழக்கு விசாரணை

முன்னாள் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி (தற்போது திராவிடர் விடுதலைக் கழகம்) மற்றும் முன்னாள் பெ.தி.க பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் (தற்போது தந்தை பெரியார் திராவிடர் கழகம்) ஆகியோர் மீது பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன செயலாளரும், திராவிடர் கழகத் தலைவருமான திரு. கி. வீரமணி அவர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் காபிரைட் ஐ (copyright) மீறியதாக– அதாவது பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கே சொந்தமான பெரியாரின் ‘குடிஅரசு’ பத்திரிகை மற்றும் இதர தொகுப்புகள் , புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் ஆகியவற்றை மீறி வெளியிட்டதற்காக ரூ.15,00,000/– இழப்பீடு கேட்டு 2008ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கில் ஒன்றன்பின் ஒன்றாக உயர்நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை திரு. கி. வீரமணி அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுமல்லாமல், பெரியார் தன் எழுத்துகளுக்கு தனியாக காப்புரிமை கொண்டாடாததால் பெரியாரின் எழுத்தும் பேச்சும் , அவர் இறந்து 25 ஆண்டுகள் கழிந்ததும் அதே காபிரைட் சட்டப்படியே யாரும் உரிமை கொண்டாட முடியாது என்றும், பொதுமக்களின் பொதுவுரிமைப் பயன்பாட்டிற்கு வந்துவிட்டது என்றும் உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளார்கள். ஆனால் மீண்டும் திரு. கி. வீரமணி அவர்கள் புதிதாக இரண்டு இடைநிலை மனுக்களை தாக்கல் செய்திருந்தார். அதில் கொளத்தூர் மணி தற்போது பெரியார் திராவிடர் கழகத்தில் இல்லை; தனியாக திராவிடர் விடுதலைக் கழகம் என்ற அமைப்பை ஆரம்பித்துள்ளார் என்றும் , பெரியார் திராவிடர் கழகத்திற்குப் பதிலாக திராவிடர் விடுதலைக் கழகத்தை தரப்பினராக வழக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும்; மற்றொரு மனுவாக ‘குடிஅரசு’ புத்தக வெளியீடு சம்பந்தமாக உச்சநீதிமன்ற உத்தரவுப்படி வரவு செலவு கணக்கைத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் புதிய மனுக்களை தாக்கல் செய்திருந்தார்.

மனுக்கள் மீதான விசாரணை 08.11.2018 வியாழன் அன்று நீதிபதி. எம்.சுந்தர் முன் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது கொளத்தூர் மணி சார்பாக வழக்கறிஞர்கள் எஸ் . துரைசாமி, வை. இளங்கோவன் ஆகியோர் ஆஜரானார்கள். வழக்கறிஞர் எஸ். துரைசாமி வாதிடுகையில், கொளத்தூர் மணி தரப்பில் உயர்நீதிமன்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் , இந்த வழக்கையே நிராகரிக்கக் கோரும் ( reject the plaint ) மனுவினை தாக்கல் செய்துள்ளோம் என்றும், அந்த மனுவையும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதை ஏற்றுக்கொண்ட நீதிபதி அவர்கள் தம் உத்தரவில், reject the plaint – வழக்கை 23.11.2018 அன்று முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாகவும், அதற்கு பின் மற்ற மனுக்களை விசாரிப்பதாகவும் உத்தரவிட்டுள்ளார்கள். வழக்கு விசாரணை மீண்டும் 23.11.2018 அன்று நடைபெறுகிறது.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 15.11.2018

## கேரளா மதச் சடங்குகளை எதிர்த்தே வளர்ந்தது

# மதச் சடங்குகளுக்கு எதிரான சமூக சீர்திருத்தங்கள் தேவை

*16.10.2018 அன்று திருவனந்தபுரத்தில் நடந்த இடது ஜனநாயக முன்னணி கொள்கை விளக்கப் பொதுக் கூட்டத்தில் கேரள முதல்வர் பினராயி விஜயன் ஆற்றிய உரையிலிருந்து –*

சமூக சீர்திருத்த மரபு தான் நமது மகத்தான மரபு. நாம் அத்தகைய சமூக சீர்திருத்த மரபைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறோம். இங்கு மேலோங்கி நிற்கும் சமூகசீர்திருத்த இயக்கங்கள் அனைத்தும் ஸ்ரீநாராயண குரு, சட்டம்பி சுவாமிகள் போன்றவர்களால் தலைமை தாங்கி வழி நடத்தப் பட்டவை. அதனால்தான் “ஒரு பைத்தியக்காரர்களின் கூடாரம்” என்று விவேகானந்தரால் விமர்சிக்கப் பட்ட கேரளம் மாநிலம், இன்று மத பேதமற்ற, ஜாதி பேதமற்ற சமூகமாகமுன்னேறி நாட்டிற்கே முன்னுதாரணமாக திகழ்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இங்கே நமது நாட்டின் வரலாற்றை எடுத்துக்கொண்டாலும், நமது மாநிலத்தின் வரலாற்றை எடுத்துக்கொண்டா லும், எந்த காலகட்டங்களில் எல்லாம் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் உருவெடுத்தனவோ அந்த கால கட்டங்களில் எல்லாம் அதற்கெதிரான ஒரு பகுதியினரும் களத்திலிறங்கி இருக்கிறார்கள். அந்த பிரிவினரில் பிற்போக்கு சக்திகள் மட்டும் பங்கெடுக்க வில்லை. சமூக சீர்திருத்தங்கள் மூலம், உரிமைகள் அடைய வேண்டிய, நன்மைகளைப் பெற வேண்டிய, பலனடைய வேண்டிய பிரிவினர் யாரோ அவர்களையே, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு எதிராக அணி வகுக்கும்படி செய்வது காலம் காலமாக பிற்போக்கு சக்திகளால் மேற்கொள்ளப் படுகிறது. தற்போதும் அதுதான் நடக்கிறது நமது நாடு பார்த்த மிகக் கொடூரமான சடங்கு, சதி என்ற ஒன்றாகும்.

கணவர் இறந்துவிட்டால், மனைவியை கணவரின் அந்த சிதையில் தள்ளிவிடும் வழக்கம்.... ஒரு மூட நம்பிக்கை. அந்த சதி என்ற வழக்கத்திற்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டது. அது சமூக சீர்திருத்த இயக்கங் களின் பலனால் மட்டுமே நடந்தது. நாம் இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில், அன்றைய கணக்குப்படி 1813 முதல் 1829 வரையிலான காலகட்டத்தில் 8135 பெண்கள் சிதையில் குதித்து உயிரிழந்தார்கள். அந்த வழக்கம் இன்றும் தொடர்ந்திருந்தால், எத்தனை ஆயிரம், எத்தனை லட்சமாகியிருக்கும் என்று கணக்கிட்டு பார்த்துக் கொள்ளலாம்... என்ன ஆகியிருக்கும் நமது நாட்டின் நிலைமை? ஆனால்இந்த சடங்கின், மூடநம்பிக்கை யின் பெயரில், இந்த வழக்கத்திற்கெதிராக சட்டம் இயற்றப்பட்ட பிறகும், பெண்கள் இதுபோன்று சிதையில் குதிக்க முயன்றார்கள்.... சிலர் குதிக்கவும் செய்தார்கள். அதற்கெதிராக பெரிய எதிர்ப்புகளும் கிளம்பின. இ.எம்.எஸ், வி.டி, எம்.ஆர்.ஜி, பிரேம்ஜி போன்றவர்கள் எல்லாம் அன்றைய பிராமண சமுதாயத்திலிருந்த தவறான வழக்கங்களுக்கு எதிராக எதிர்ப்புப் போராட்டங்களைத் தொடங்கினர்.

அதன் பகுதியாக விதவை மறுமணம் சாத்தியமாகும் நிலை வந்தது. அதுபோல, அன்றைய சமூகத்தில் இருந்த வித்தியாசமான சூழலின் அடிப்படை யில் இளம்பெண்களை, அதாவது பருவமடைவதற்கு முன்பாகவே, சிறுமிகளை படுகிழவர்களுக்கு மணம் முடித்துவந்தார்கள். அந்த சிறுமிகள் பருவமடைவதற்கு முன்பே அந்த கிழவனின் கதை முடிந்துவிடும். பின்பு அந்தச் சிறுமி தலை மொட்டையடிக்கப்பட்டு இருட்டறையில் அடைந்து கிடக்க வேண்டும். அதற்கெதிராக முன்பு குறிப்பிடப்பட்டவர்கள் எல்லாம் போராட்டம் நடத்தத் துணிந்த போது அவர்களை ஜாதி விலக்கம் செய்ய முடிவெடுத்தார்கள். பயமுறுத்தினார்கள். பிற்போக்காளர்களின் கடுமையான எதிர்ப்பும் இருந்தது. நமது நாட்டில் சில இடங்களில் மனிதப்பலி கொடுக்கும் முறை இருந்தது. பின்னர், அது மிருகப்பலியாக மாற்றப் பட்டது. மிருக பலியும் செய்யக்கூடாது என்ற நிலை வந்த போது தான் மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்த்து கலக்கி இரத்தம் போன்ற திரவத்தை உருவாக்கி அடையாள ரீதியாக பலியிடும் முறை வந்தது. இதெல்லாம் சடங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களாகும். நமது நாட்டில், நமது மாநிலத்தில் என்னவெல்லாம் வகையிலான மாற்றங்கள்? வழக்கங்கள் என்பது மரபுவழியாக கடைப்பிடிக்கப்படுபவை ஆகும். அது கால கட்டங்கள் தோறும் மாற்றமடையும். ஒரு காலத்தில்


## பினராயி விஜயன்
## ( கேரள முதல்வர் )




இருப்பது பின்வரும் காலங்களில் இருக்கவேண்டும் என்பதில்லை.

முன்பெல்லாம் கோவிலில் நுழைவது என்றால், கோவில் குளத்தில் நன்றாகக் குளித்து, அந்த ஈரத்துணியுடன் தான் செல்லவேண்டும். இப்போது, எல்லோரும் அப்படியா கோவிலுக்குள் நுழை கிறார்கள். உடலை தங்கள் வசதிக்கேற்ப சுத்தம் செய்து கொள்ளுகிறார்கள். ஆனால், கோவிலில் அப்படியே தானே நுழைகிறார்கள்? முன்பு பெண்களின் விஷயத்தில் என்னவெல்லாம் கட்டுப்பாடுகள் இருந்தது? மாதவிடாய் வந்து விட்டால். அந்தப் பெண்களுக்கு வீட்டில் கூட இருக்கமுடியாது. வசிக்குமிடத்திலிருந்து வெளியே செல்ல முடியாது. வீட்டிலிருந்து தனியே வேறொரு இடத்தில் அதற்கென கட்டப்பட்ட கட்டிடத்தில் தான் தங்கிக்கொள்ள வேண்டும்.... ஆனால் இப்போது? எல்லாம் மாற்றங்கள் அல்லவா..? நமது கண் முன்னே ஏற்பட்ட மாற்றங்கள் அல்லவா?

> **சடங்குகள் மீறப்பட வேண்டியது என்று தான் நமது சீர்திருத்தத் தலைவர்கள் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதை நாம் நினைவில் இருத்த வேண்டும்.**

முன்காலத்தில் பிரசவம் நடந்தால் ‘வாலாய்மை’ (பிரசவ நேரத்தில் அசுத்தம் என்ற பெயரில் கடைப்பிடிக்கப் பட்ட தீட்டு). மரணம் நடந்தால்... குடும்ப உறுப்பினர்கள் இறந்தால் “புலை” (இறப்பினால் ஏற்படும் தீட்டு).. எத்தனை நாட்கள் அதற்கு...? ஆனால் இப்போதோ மரணம் நடந்து சவ அடக்கம் முடிந்தவுடன், ஒருவர் கூறுவார், “எல்லா காரியங்களும் இத்துடன் முடிந்துவிட்டது. கலைந்து செல்பவர்கள் கலைந்து செல்லலாம்” என்று.... எல்லோரும் கலைந்து செல்கிறார்கள். இதுதானே சடங்குகளின் நிலைமை? மாற்றங்கள் நிகழும் போக்கை நாம் பார்க்க வேண்டும் அல்லவா? இத்தகைய மாற்றங்கள், முன்பு சொன்ன சமூக சீர்திருத்த நாயகர்களின் தலையீட்டினால் ஏற்பட்டது தானே?

இங்கே முன்பு மார்பு மறைக்க உரிமை இல்லை அல்லவா? அவ்வாறு மார்பு மறைக்க உரிமையில்லாத காலகட்டத்தில் அதற்கு எதிராக போராட்டம் நடத்தப்பட வில்லையா? அவ்வாறு மார்பு மறைத்து, கோவிலில் நுழையும் உரிமை கிடைத்த பிறகும் கூட அந்த உரிமையை சீர்குலைப்பதற்கான போராட்டங்கள் நடக்கவில்லையா இங்கே..? பெண்களே கூட அதற்கெதிராக களமிறங்கினார்கள்... அதோடு மார்பு மறைத்தவர்களின் மாராப்பை, மார்பு மறைக்காத பெண்களே கிழித்தெறியத் துணிந்தார்கள். இதெல்லாம் நமது மாநிலத்தின் வரலாறல்லவா? ஆனால், நாம் அங்கேயே நின்று கொண்டிருக்கிறோமா? ‘எங்களுக்கு மார்பை மறைக்க வேண்டாம்’ என்று கூறியபெண்களுடனா இந்த நாடு நின்றது...? காலம் அவர்களுடனா நின்றது...? காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப சடங்குகளும் வழக்கங்களும் மாறுவதில்லையா?

முன்பு, இங்கே பெண்களுக்கு சொத்துரிமை இருந்ததில்லை. பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட்டது பெரிய மாற்றமாக இருக்க வில்லையா? நமது சமூகத்தின் முன்னேறிய பகுதியினர் அதனை ஏற்றுக்கொண்டார்களா? பிற்போக்கு சக்திகள் அதற்கெதிராக நிற்கவில்லையா? சுருக்கமாகச் சொன்னால், என்னென்ன சமூக சீர்திருத்த இயக்கங்கள் நடந்துள்ளனவோ அந்த கட்டங்களில் எல்லாம் அதற்கெதிராக கடுமையான எதிர்ப்புகளும் ஏற்பட்டுள்ளன. முன்பிருந்த நிலை என்னவாக இருந்தது?

“பிராமணர்”களிடமிருந்து 64 அடி தூரத்தில் பறையர் நிற்க வேண்டும். 54 அடி தூரத்தில் புலையர் நிற்க வேண்டும். 36 அடி தூரத்தில் ஈழவர் நிற்க வேண்டும். ஈழவர்களிடத்திலும் தீண்டாமை வழக்கமிருந்தது. ஈழவர்களிடமிருந்து 30 அடி தூரத்தில் புலையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நிற்க வேண்டும். என்னவெல்லாம் தவறான பழக்கவழக்கங்கள் நமது மாநிலத்தில் நடைமுறையில் இருந்தன? அப்போதும் சமூக சீர்திருத்த இயக்கங்களின் பலனாகத்தானே, இவையெல்லாம் மாறின? அதற்கு உறுதியான தொடர்ச்சிகளும் ஏற்பட்டன. நமது மாநிலத்தில்மேலோங்கி வந்த பல்வேறு இயக்கங்கள் விவசாயிகளின் இயக்கம், தொழிலாளர்களின் இயக்கம், இடதுசாரி இயக்கம் போன்றவற்றின் தலையீடுகள், இந்த சமூக சீர்திருத்தக்கருத்துக்களை எல்லாம் உள்வாங்கிக் கொண்டு முன்னேறிச் சென்றன.

அதுதானே இந்த மாநிலத்தை மாற்றின? இந்த மாநிலத்தின் இதுபோன்ற மாற்றங்களை உள்வாங்க முடியாத ஒரு நிலை இப்பொழுதும் உள்ளன என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.


(தொடரும்)


நன்றி : தீக்கதிர்

# நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் பெரியார் பிறந்த நாள் விழா

தந்தை பெரியாரின் 140 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில், 17.09.2018 அன்று (திங்கள்) காலை 10 மணியளவில், எடப்பாடி ரோடு காவேரி நகரில், நகரத் தலைவர் தண்டபாணி பெரியாரின் பிறந்தநாள் விழா ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். காவேரி நகரில் தோழர் பரிமளம் கொடியேற்றினார். பாலம் அருகில், பெரியாரின் பொன்மொழி வாசக பலகையை சஜினா திறந்து வைத்தார், மீனாட்சி கொடியேற்றினார். பேருந்து நிலையத்தில் கலைசெல்வி பொன்மொழி வாசக பலகையை திறந்து வைத்தார். கலைவாணி கொடியை ஏற்றினார். அங்கு தோழர்களால் கடவுள் மறுப்பு பாடல் பாடப்பட்டது. பின் நகர காவல் நிலையம் மற்றும் நகராட்சி அலுவலகங்களில், தந்தை பெரியாரின் வாசகங்கள் அடங்கிய அட்டை மற்றும் சாக்லேட் வழங்கப்பட்டது.

தண்டபாணி, செல்வி சைக்கிள் கடையின் சின்ன நூலகத்தில் தந்தை பெரியாரின் உருவப்படத்தை ரேணுகா திராவிடமணி திறந்து வைத்தார், இனிப்பு வழங்கப்பட்டது. அங்கு, அறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர் நகரில் ரேணுகா திராவிடமணி கொடியேற்றினார். கோட்டமேடு பைபாஸில் சந்திரா வாசக பலகையை திறந்து வைத்தார். ஆட்டோ குமார் துணைவியார் கொடியேற்றினார். கம்பன் நகரில் உள்ள தேவி மாதேஷ் இல்லத்தில் தோழர்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

குமாரபாளையம் கலை அறிவியல் கல்லூரி அருகில் மணியம்மை கழக கொடியேற்றினார், காமராஜர் சிலைக்கு மாலை அணிவிக்கப் பட்டது. கத்தேரி பெரியார் சமத்துவ புரத்தில் உள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மதிய உணவு வழங்கப்பட்டது. முருகாண்டி பெரியாரின் சிலையை சுற்றியுள்ள புற்களை மற்றும் புதர்களை சுத்தம் செய்து வைத்திருந்தார். திமுக பிரமுகர் கலைச்செல்வன் பொன்மொழி வாசக பலகையை திறந்து வைத்தார். ஊர்வலத்தில் 30 க்கும் மேற்பட்ட வாகனங்களில் தோழர்கள் அணி வகுத்து வந்தனர். இரு சக்கர வாகனங்களுக்கு முன், ட்ரம்ஸ் இசைக்கப்பட்டுக் கொண்டே வந்தது. நிகழ்வில், குமாரபாளையம், பள்ளிபாளையம், திருச்செங்கோடு, காளிப்பட்டி பகுதியை சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

## குழப்பவாதிகளுக்கு கொளத்தூர் மணி விளக்கம் (6)

# திராவிடம்: ஈழத்து தமிழ் அறிஞர்களும் அம்பேத்கரும் தந்த விளக்கம் என்ன?

*“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

2005ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. ‘திராவிட இயக்கக் கருத்து நிலையின் இன்றைய பொருத்தப்பாடு’ என்ற தலைப்பில் பேராசிரியர் சிவத்தம்பி ஒரு நூலை எழுதினார். இவர் நா.கைலாசபதி போன்ற மார்க்சிய சிந்தனை கொண்ட தமிழறிஞர் களின் தொடர்ச்சியாகவும், தமிழ் ஆளுமை யாகவும், அறிஞராகவும் உலகம் முழுவதும் அறியப்பட்டவர். ஆனால் இவரைத்தான் உலகத் தமிழ் மாநாட்டில் அனுமதிக்காமல் விமானத்திலேயே வைத்து அப்படியே அனுப்பினார் ஜெயலலிதா.

அந்த நூலில் அவர் எழுதிய சில சொற்களை மட்டும் இங்கே குறிப்பிட வேண்டும். “தமிழ்நாட்டில் வாழும் பிராமணர் அல்லாத பாதிக் குடும்பங்களைச் சேர்ந்த வர்கள் தங்களின் சமூக நிலைமையையும், தங்களின் அசைவு இயக்கத்தையும் வரையறை செய்த பிராமண கருத்து நிலை தம்மீது திணித் ததென அவர்கள் கண்ட மேலாண்மைக்கு எதிரான போராட்டங்களினூடே மேற் கிளம்பியதும், அந்தப் போராட்டங்களை நியாயப்படுத்துவதற்கு பயன்பட்டதுமான சிந்தனை நிலைப்பாடே திராவிடக் கருத்து நிலையாகும். பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்ற சமூக மேலாதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பியதுதான் திராவிடக் கருத்து நிலையாகும். அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் தமிழ் பிரக்ஞை (தமிழைப் பற்றிய சிந்தனை) ஏற்படுவதற்கு அது தளமாக அமைந்தது. திராவிடம் என்பது ஆரியத்தின் எதிர்நிலையாகக் கருத்தில் கொள்ளப்பட்டது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்” என்று எழுதினார் சிவத்தம்பி.

4 மொழி பேசுபவர்களைக் கொண்டு திராவிடம் என்று குறிப்பிடவில்லை. ஆரிய ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு சொல்லாகத் தான் திராவிடம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை ஈழத்தைச் சேர்ந்த தமிழறிஞர் சிவத்தம்பி கூறுகிறார். இவர் எழுதிய மற்றொன்றையும் அறிய வேண்டும். “இலங்கை யின் தமிழ் தேசிய உணர்வு உருவாக்கத்திலும், எடுத்துரைப்பிலும் திராவிட இயக்கத்தின், பெரியாரின் செல்வாக்கு மிகக் கணிசமான தாகும்” என்கிறார். அதாவது, ஈழத்தில் விடுதலைப் போர் நடக்கிறது என்றால், தமிழ் தேசிய உணர்வு வந்திருக்கிறது என்றால் அதில் திராவிட இயக்கத்துக்கும், பெரியாருக் கும் கணிசமான பங்கு இருக்கிறது என்பதைத் தான் அவர் சொல்லுகிறார்.

இதில் திமுகவையும் சேர்த்துப் பேச வேண்டியுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால், சிலவற்றை ஏன் செய்ய முடியாமல் போய்விட்டது என்பதையும் அவர் ஆய்வு செய்தார். “திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பங்கெடுத்து வெற்றிபெற்று ஆட்சிக்கு வந்தது. ஆனால் திராவிடக் கருத்து நிலையை ஏற்றுக் கொள்ளாத, இதைக் குரோத உணர்வுடன் நோக்கிய கருத்து நிலையாளர்களை பெரும் பாலும் கொண்டிருந்த உத்தியோகஸ்தர் குழுவினர் களாலேயே அப்போது ஆட்சி



நிர்வாகம் நடத்தப் பட்டது” என்கிறார். இன்றைக்கு இருக்கிற கிரிஜா வைத்திய நாதன் போல அன்றைக்குப் பலர் இருந்திருக் கிறார்கள் என்பதைத் தான் அவர் சொல்லு கிறார். அதை மனதில் வைத்துக்கொண்டு திமுகவின் செயல்பாடுகளை எடை போடுங்கள் என்கிறார்.

திராவிடக் கட்சி ஆட்சிக்கு வந்தவுடனேயே நிறைய செய்திருக்கலாமே, ஏன் செய்யவில்லை என்று இப்போதும் கூட சொல்கிறார்கள். தீர்மானம் போட்டுவிட லாம், யார் அதை நடைமுறைப்படுத்துவது? பெண்கள் கல்வி பெற வேண்டும் என்பதற்காக திருமண உதவித் தொகைகளை கலைஞர் வழங்கினார். முதலில் 8ஆவது படித்தால் 5,000 ரூபாய் என அறிவித்தார். பிறகு அது 20,000 ரூபாய் வரை உயர்ந்தது. 2001ஆம் ஆண்டில் கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது திருமண உதவித் தொகையை ரூ.25,000ஆக உயர்த்தினார். ஒரு பெண் அப்போது திருமண உதவித் தொகைக்கு விண்ணப்பித்திருந்தார்.

> **ஈழத்தில் விடுதலைப் போர் நடக்கிறது என்றால், தமிழ் தேசிய உணர்வு வந்திருக்கிறது என்றால் அதில் திராவிட இயக்கத்துக்கும் பெரியாருக்கும் கணிசமான பங்கு இருக்கிறது என்பதைத்தான் பேரா. சிவத்தம்பி சொல்கிறார்**

அதிகாரிகள் அந்தப் பெண்ணுக்கு உதவித் தொகை இல்லையென்று மறுத்துவிட்டனர். 8ஆவது படித்திருந்தால்தான் உதவித் தொகை, நீ 10ஆவது படித்திருக்கிறாய். எனவே உனக்கு உதவித் தொகை இல்லையென்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். எட்டாவதா வது படிக்கட்டும் என்பதற்காகக் கொண்டு வந்த சட்டத்தை அதிகாரிகள் எப்படிப் புரிந்து கொண்டு செயல்படுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது. அப்போது கலைஞர் ‘முரசொலி’யில் இதைச் சுட்டிக் காட்டி, “நான் எப்படி, யாரை வைத்து ஆட்சி செய்கிறேன் என்பதைக் கொஞ்சம் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்” என்று எழுதினார்.

இவர்களுக்காவது புரியவில்லை. ஆனால் தொடக்கத்தில் திராவிடக் கருத்தியலை எதிர்ப்பவர்கள், இதை ஒரு குரோத உணர்வோடு பார்த்தவர்கள் அதிகாரிகளாக இருந்த காலகட்டத்தில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்தது. 1921ஆம் ஆண்டிலேயே நீதிக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இட ஒதுக்கீட்டு ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். 1922, 1923 என தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகளிலும் ஆணை பிறப்பித்தார்கள். ஆனால் நடக்கவே இல்லை. என்னவென்று பார்த்தால் அப்போது தாலுகா அலுவலகத்தில் பணிக்கு ஆட்கள் தேவையென்றால் வட்டாட்சியரே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு ஆட்கள் வேண்டு மென்றால் அவர்களே நியமித்துக் கொள்ள லாம். அப்போது பார்ப்பனர்கள்தான் அதிகாரிகளாக இருந்தனர். அதனால் பார்ப்பனர்களையே அவர்கள் நியமித்துக் கொண்டனர்.

எனவே அவரவர்க்கு தேவையானவர்களை நியமித்துக்கொள்ளும் சூழல்தான் நிலவியது. அதன்பிறகுதான் நீதிக்கட்சி Staff Selection Commission-I உருவாக்கியது. எந்தவொரு அரசு அலுவலகத்திற்கும் ஆட்கள் தேவை யென்றால் எங்களுக்கு சொல்லுங்கள், நாங்கள் எடுத்து அனுப்புகிறோம் என்று நீதிக்கட்சி முடிவெடுத்து நடைமுறைப்படுத்தியது. இப்போது இருக்கிற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொடக்கம் அதுதான்.

நம்மீது அதிகாரம் செலுத்திய, நம்மை அடக்கி வைத்திருந்த, தமிழினத்தை வளர விடாத கூட்டம்தான் ஆரியக் கூட்டம். அதற்கு எதிராக எழுந்ததுதான் திராவிடம். ஆரியத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான சிந்தனை தான் திராவிடம் என்பதை ஈழத்தில் இருப்பவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இங்கேயே இருப்பவர்களுக்குத்தான் தெரிவ தில்லை.

அம்பேத்கரை ஏற்றுக்கொண்டவர்கள் என்று சொல்லிக்கொண்டு சிலர் தூய தமிழ் வாதம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பெங்களூர் குணா தொடங்கி பலர் இந்தப் பட்டியலில் இருக்கிறார்கள். திராவிடம்-ஆரியம் என்பதை அம்பேத்கர் ஏற்றுக் கொள்ளவே இல்லை என்பதையும் கொஞ்சம் பேர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். “தென்னாட்டில் இருக்கிற பார்ப்பனர்களும் திராவிடர்கள்தான். வட நாட்டில் இருக்கிற சமார்களும் (இங்கிருக்கிற அருந்ததியர் களைப் போல) ஆரியர்கள்தான்” என்றுதான் அம்பேத்கர் சொன்னார். இனக்கலப்பு எல்லா இடங்களிலும் ஏற்பட்டுவிட்டது என்பதைக் குறிக்கும் விதமாக அம்பேத்கர் இதைச் சொன்னார்.

பெரியாரும் இதையே சொல்லியிருக் கிறார். இங்கிருக்கிற ஆரியப் பார்ப்பனர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்களின் நேரடி வாரிசுகள் என்று நான் சொல்ல வர வில்லை. இரத்தம் கலந்துவிட்டாலும், அவர்களுடைய ஆச்சாரம், அனுஸ்டானம் நம்மோடு கலந்துவிட்டதா என்பதைப் பார்த்துதான் அவர்களைப் பிரிக்கிறேனே தவிர இரத்தப் பரிசோதனை செய்து அவர்களைப் பிரிக்கவில்லை என்பதை மிகத் தெளிவாக பெரியார் சொல்லுகிறார்.

1946ஆம் ஆண்டு ‘சூத்திரர்கள் யார்’ என்ற நூலை அம்பேத்கர் எழுதினார். அதில் பிற்படுத்தப்பட்ட மக்களான சூத்திரர்கள் எவ்வாறு உருவானார்கள் என்று ஆய்வு செய்து எழுதியிருந்தார். அதற்குப் பிறகு 2 ஆண்டுகள் கழித்து 1948ஆம் ஆண்டில் ‘தீண்டாதார் யார்’ என்று ஒரு நூலை அம்பேத்கர் எழுதியிருக்கிறார். தாழ்த்தப்பட்ட மக்கள் மீது எப்படி தீண்டாமை வந்தது, அவர்கள் எப்படி தனி ஜாதி ஆனார்கள், எப்படி தீண்டாதவர்கள் ஆக்கப்பட்டார்கள் என்று இந்த நூலில் எழுதியிருக்கிறார்.

அதை தலித் எழில்மலை அவர்கள் ‘மண்ணின் மைந்தர்கள் மறைக்கப்பட்ட வரலாறு’ என்ற பெயரில் தலித் அகாடமி வழியாக தமிழில் வெளியிட்டிருந்தார்.

(தொடரும்)

தொகுப்பு: ர.பிரகாசு

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# எம்.டி.எம்.ஏ.வில் என்ன நடக்கிறது?

எம்.டி.எம்.ஏ.வில் என்ன நடக்கிறது? அவுட் லுக் தரும் ஆய்வு:

ராஜீவ் கொலை விசாரணைக்காக 1998ஆம் ஆண்டு டிசம்பரில் நியமிக்கப் பட்ட சி.பி.அய்யின் பல்நோக்கு விசாரணை ஆணையம் (எம்.டி.எம்.ஏ) முடங்கிக் கிடக்கிறது. கடந்த 20 ஆண்டு களுக்கு மேலாக ஆமை வேகத்தில் நகர்ந்து கொண் டிருக்கும் மக்கள் மறந்து போன இந்த விசாரணை அமைப்பு - இம்மாதம் சி.பி.அய். அமைப் பில் உருவான குழப்பங்களின்போது மீண்டும் செய்தியானது. சி.பி.அய் அமைப்பில் நடந்த அதிகார மாற்றங்களின்போது அந்த அமைப்பில் இணை இயக்குநராக நான்காம் இடத்தில் இருந்த அருண் குமார் சர்மா இந்த நிறுவனத்திற்கு அதிகாரியாகத் தூக்கியடிக்கப்பட்டார். நாட்டின் ஆகப் பெரும் புலனாய்வு அமைப்பின் உள் முரண்பாட்டால் ஏற்பட்ட சர்மாவின் நியமனம், எம்.டி.எம்.ஏ அமைப்பையே சந்தேகத்துக்குரிய தாக்கி உள்ளது.

சி.பி.அய்.யில் திறமையானவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது இந்த அமைப்பு. வேறு புலனாய்வு நிறுவனங் களைச் சேர்ந்தவர்களும் இதில் இடம் பெற்றிருக்கின்றார்கள். ராஜீவ் கொலையில் விரிவான சதித் திட்டத்தைக் கண்டறிய அமைக்கப்பட்ட இந்த அமைப்பு இரண்டு ஆண்டுகளில் விசாரணையை முடித்திருக்க வேண்டும். ராஜீவ் கொலைக்குப் பின்னால் நடந்த சதிவேலைகளை வெளிக்கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் 20 ஆண்டுகள் ஓடி விட்ட பிறகும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட வில்லை இவை எல்லாம் வெளிப் படையாக எழும் கேள்விகள். இந்த நீண்ட நெடிய தாமதத்தால் முக்கியக் குற்றவாளிகள் என்று சந்தேகிக்கப் பட்டவர்களும், சாட்சிகளும் மரணமடைந்து விட்டனர்.

1991 ஆம் ஆண்டு மே 21 ம் தேதி ஸ்ரீபெரும்புதூரில் ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்து பெல்ட்டை இடுப்பில் கட்டிக் கொண்டு மனித வெடிகுண்டாக மாறிய பெண், ராஜீவ்காந்தியைக் கொன் றார். அவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத் தில் மேலும் 14 பேர் மரணமடைந்தனர்.

புலனாய்வின்போது சந்தேகத்தின் அடிப்படையில் பலர் கைது செய்யப் பட்டனர்; பலர் தண்டிக்கப்பட்டனர்; கொலைக்குப் பின்னணியில் இருந்த சதியைக் கண்டறிய எம்.சி. ஜெயின் கமிசன் நியமிக்கப்பட்டது. விசாரணை யின்போது சதித் திட்டத்தில் பல முக்கியப் பிரமுகர்களின் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் உருவானது. காங்கிரசின் அரசியல் எதிரியான ஒரு சாமியார், காலிஸ்தான் தீவிரவாதி, சர்வதேச ஆயுதத் தரகர், தமிழக முதல்வராக இருந்த கருணாநிதி ஆகி யோரின் பெயர்கள் எல்லாம் சேர்க்கப் பட்டன. ஆனால் உண்மை என்ன வென்பது மூன்று பேருக்கு மட்டுமே தெரிந்திருக்கும் வாய்ப்பு உண்டு. அவர்கள், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், அவரது நம்பிக்கைக்குரிய ‘கே.பி.’ என்றழைக்கப்படும் குமரன் பத்மநாபன் மற்றும் கிட்டு.

இப்போது சி.பி.அய். அமைப்பில் நடந்த குழப்பத்தில் அருண்குமார் சர்மா, ‘எம்.டி.எம்.ஏ.’ விசாரணைப் பொறுப்பை ஏற்றுள்ளார். இவர் சி.பி.அய்.க்கான கொள்கைகளை உருவாக்கும் பதவியில் இருந்தவர்.

சதியின் பின்னணி குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜெயின் கமிசன், சந்தேகிக்கக் கூடிய 21 நபர்களைப் பட்டியலிட்டதோடு ‘எம்.டி.எம்.ஏ.’ விடம் கேள்விகளை முன்வைத்து அதற்கு விடை கண்டறிய வேண்டும் என்று கேட்டிருந்தது. அந்த சதியில் சாமியார் சந்திராசாமியின் பங்கு என்ன? காங்கிரசை வசைபாடும் சுப்ரமணிய சாமி, லண்டனில் சந்திராசாமியை சந்தித்தது ஏன்? காலிஸ்தான் பயங்கர வாதிகள் அதில் ஈடுபட்டார்களா? யாருடைய தூண்டுதல் காரணமாக ஆயுதத் தரகர் அட்னன் காஷோகியின் கப்பல் விடுதலைப் புலிகளுக்கு அந்த நேரத்தில் ஆயுதங்களை ஏற்றி வந்தது? இந்தக் கேள்விகளை விசாரித்து அறியப் பணித்த ஜெயின் கமிசன், பிரபாகரன், கே.பி., கிட்டு ஆகிய மூவரையும் பிடித்து விசாரித்தால் அந்நிய சதிகள் பற்றிய உண்மை தெரியும் என்றும் எம்.டி.எம்.ஏ. விற்கு அறிவுறுத்தியது.

ஜெயின் கமிசனின் ‘செயல்பாட்டு அறிக்கை’ நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது கிட்டு இறந்து விட்டார். கிட்டுவை இந்திய கடற்படை காட்டிக் கொடுத்ததோடு அவர் வந்த படகையும் மூழ்கடித்து விட்டது. கடற் படையினர் கிட்டுவையும் அவருடன் வந்தவர்களையும் உயிருடன் மீட்டெடுத் திருக்க முடியும். கிட்டுவை விசாரித்திருந் தால் அவர் தந்திருக்கக் கூடிய தகவல் முக்கியமானதாக இருந்திருக்கும் என்று அப்போது ‘எம்.டி.எம்.ஏ.’வின் சென்னைப் பிரிவில் 1999 லிருந்து 2001 வரை பணியாற்றிய புலனாய்வு அதிகாரி கே.ரகோத்தமன் கூறுகிறார். இவர் புலிகளின் நடவடிக்கைகளை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக்குழுவின் விசாரணை அதிகாரியாகவும் இருந்தார். கிட்டுவின் மரணத்துக்குப் பிறகு இந்த சதிக்கான மர்மத்தைத் திறக்கும் திறவுகோல் பிரபாகரன், கே.பி. ஆகிய இருவரிடம் மட்டுமே இருந்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் பிரபாகரனைக் கொன்று விட்டது.

உண்மை அறிந்த மூவரில் இப்போது கே.பி. மட்டுமே உயிருடன் இருக்கிறார். பிரபாகரன் கொல்லப்பட்ட மூன்று மாதங்களில் இலங்கை அரசு கே.பி.யைப் பிடித்து, தனது பாதுகாப்பில் உயிருடன் வைத்திருக்கிறது. இந்தியாவைவிட எவ்வகையிலும் வலிமையில்லாத இலங்கை புலனாய்வுத் துறை, கே.பி.யைப் பிடித்துவிட்ட நிலையில் வலிமை மிக்க இந்தியப் புலனாய்வு நிறுவனம் பல ஆண்டுகளாக இவரைப் பிடிக்கும் முயற்சியில் பல ஆண்டுகளாக வெற்றி பெற முடியவில்லை என்பதை நம்ப முடிய வில்லை என்கிறார் ரகோத்தமன்.

‘எம்.டி.எம்.ஏ.’வில் 15 ஆண்டுகள் புலனாய்வு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றுள்ள பி.என்.மிஸ்ரா, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் தருவித்துத் தந்த கே.பி.யை இலங்கையில் பேட்டி கண்டதாகக் கூறுகிறார். இந்தக் கொலை யில் கே.பி. தனக்குத் தொடர் பில்லை என்று மறுத்ததாகவும், பிரபாகரனும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த பொட்டு அம்மானும் இந்த முடிவை எடுத்தனர் என்றும் 2011 ஆம் ஆண்டு ‘எம்.டி.எம்.ஏ.’ அறிக்கை கூறுகிறது.

சர்வதேச ஆயுதத் தரகர் அட்னன் கஷோகியுடன் கே.பி.க்கு தொடர் பிருந்தது என்றும், கஷோகி சந்திராசாமி யின் பக்தர் என்றும், சந்திராசாமியுடன் நெருக்கமாக இருந்தவரும் பத்திரிக்கை யாளருமான ராஜேந்திர குமார் ஜெயின் கூறுவதோடு, ராஜீவ் கொலை சதியில் சந்திராசாமிக்கு தொடர்புண்டு என்றும் குற்றம் சாட்டியுள்ளார். 1998 இல் கார் வெடிகுண்டு தாக்குதலில் ஜெயின் கொல்லப்பட்டார். ஆச்சரியம் என்ன வென்றால் ஜெயின் படுகொலையை விசாரிக்குமாறு, எம்.டி.எம்.ஏ.விடம் கூறப்படவில்லை. உண்மையை ஜெயின் வெளியிடாமல் தடுக்கும் நோக்கத் துக்காகவே கொல்லப்பட்டார் என்பது வெள்ளிடைமலை. கடந்த ஆண்டு சந்திரா சாமியும் ஆயுதத் தரகர் கஷோகியும் இறந்து விட்டனர். சந்திராசாமிக்கு ராஜீவ் கொலை சதியில் தொடர்பு உண்டு என்று ஜெயின் மட்டும் கூறவில்லை. சிறையில் இருக்கும் நிழல் உலகத் தாதாவான பப்லு ஸ்ரீவத்சாவும் சதியில் சந்திராசாமியின் பங்கு குறித்து கடுமையான குற்றச் சாட்டை முன்வைத்ததாக முன்னாள் ‘எம்.டி.எம்.ஏ.’ புலனாய்வு அதிகாரி மிஸ்ரா கூறுகிறார்.

ஆனால் அவர் என்ன கூறினார் என்பதை வெளியிட மாட்டேன் என்று கூறுகிறார் மிஸ்ரா. எம்.டி.எம்.ஏ. அமைப் பிலிருந்து பதவியில் நீடிக்க விடாமல் வெளியேற்றப்பட்டவர். எம்.டி.எம்.ஏ. கலைக்கப்படும் வரை மிஸ்ரா பதவியில் நீடிக்க மத்திய அமைச்சரவை உத்தர விட்ட பிறகும் அதைப் பொருட்படுத்தா மல் மிஸ்ரா பதவியில் நீடிக்க அனுமதிக்கப் படவில்லை.

சந்திராசாமியுடன் ரகசியத் தொடர் பில் இருந்தவர் பாஜகவின் பாராளுமன்ற உறுப்பினர் சுப்ரமணிய சாமி. அவர் லண்டனில் சந்திராசாமியை சந்தித்ததன் பின்னணி சந்தேகத்துக்கு இடமளிக்கிறது என்று கூறிய ஜெயின் ஆணையம் சுப்ரமணிய சாமியையும் கண்காணிக்க எம்.டி.எம்.ஏ.வுக்கு அறிவுறுத்தியது. தானும் சந்திராசாமியும் ஒரே நேரத்தில் லண்டன் பயணமானது எதேச்சையாக நடந்த நிகழ்வு என்று சுப்ரமணிய சாமி தந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டு சுப்ரமணியசாமி மீதான விசாரணையை யும் அவர் தொடர்பான கோப்புகளையும் ‘எம்.டி.எம்.ஏ.’ முடித்து விட்டது என்கிறார் மிஸ்ரா.

ராஜீவ் கொலைக்குப் பிறகு - அகாலி தளத் தலைவர் மகந்த் சேவாதாஸ் சிங் ராஜீவ் உயிருக்கு ஆபத்து இருப்பதாக பிரதமர் சந்திரசேகரிடம் 6 மாதங்களுக்கு முன்பே எச்சரித்ததாகக் கூறினார். காலிஸ்தான் இயக்க நிறுவனர் ஜக்ஜித் சிங் சோகான் இத்தகவலைத் தம்மிடம் கூறியதாகவும் அவர் கூறினார். விசாரணையில் இது அதீத கற்பனை என்று ‘எம்.டி.எம்.ஏ.’ முடிவுக்கு வந்தது.

எம்.டி.எம்.ஏ. விசாரணையை இந்தியா வுக்கு வெளியே நடத்த விரும்பவில்லை. அந்நிய சதியை மூடி மறைப்பதே இதன் நோக்கம் என்கிறார் ரகோத்தமன். 10 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்த அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியைத் தடுத்தது எது? சந்திராசாமி யின் நெருக்கமான சீடரும் முன்னாள் காங்கிரஸ் தலைவருமான ரமேஷ் தலால் காங்கிரஸ் மீதே குற்றம் சாட்டுகிறார். சந்திராசாமியுடன் காங்கிரஸ் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு விசாரணையைத் தொடராமல் முடக்கியது என்று கூறுகிறார். அவரது குற்றச்சாட்டை உறுதிப்படுத்த இயலவில்லை. ஆனால் அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என்கிறார், தலால்.

எம்.டி.எம்.ஏ. விசாரணையை நடத்துவதிலோ, தீவிரப்படுத்துவதிலோ கடந்த பல ஆண்டுகளாக ஆர்வம் காட்டவில்லை. அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி இந்த நிறுவனத்தில் வேலை செய்வோர் எண்ணிக்கையை 38 ஆகக் குறைத்ததிலிருந்தே இதைப் புரிந்து கொள்ள முடியும்.

உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் இந்தியா வுக்குள் புலனாய்வு விசாரணைகள் முடிந்து விட்டன என்று குறிப்பிட் டுள்ளது. கிரிமினல் வழக்குகளில் அண்டை நாடுகளின் உதவி கேட்டு 25 நாடுகளுக்கு கடிதங்கள் எழுதப்பட்டன. இன்னும் 6 நாடுகளிடமிருந்து மட்டுமே பதில் வரவில்லை என்றும் ‘எம்.டி.எம்.ஏ.’ உள்துறைக்கு அனுப்பிய அறிக்கை கூறுகிறது. இவ்வளவுக்கும் பிறகு இந்த அமைப்பின் விசாரணை ஏன் இழுத்தடிக் கப்படுகிறது என்ற கேள்விக்கு விடை கிடைக்கவில்லை. எதுவும் கூற முடியாது; அது இரகசிய அமைப்பு என்று கூறுகிறார் எம்.டி.எம்.எ அதிகாரி.ஆக எம்.டி.எம்.ஏ அமைப்பானது சோம்பேறித்தனத்தின் உச்சத்துக்கு சென்று விட்டதா? மக்கள் வரிப்பணத்தை ஏப்பம் விடும் நிறுவனமாக, பதில் சொல்ல வேண்டிய கடமையில் இருந்து நழுவிய அமைப்பாக மாறி விட்டதா? விசாரணையானது முற்றாக முடங்கி விட்டதா?

2013 வரை இந்த அமைப்பு அனுப்பிய விசாரணை முன்னேற்றம் குறித்த சீலிடப்பட்ட 60 அறிக்கைகள் சென்னை சிறப்பு நீதிமன்ற அலமாரிகளில் சீல் பிரிக்கப்படாமல் முடங்கிக் கிடப்பது ஏன்? இவற்றின் எண்ணிக்கை தற்போது சுமார் 100 ஆக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ராஜீவ்காந்தி கொலைக்கு சதித் திட்டம் தீட்டியது யார்? ஏன் தீட்டப் பட்டது என்ற உண்மை இதில் புதைந்து கிடக்கலாம் என்று நம்பப்படு கிறது. அறிக்கைகளை சீலிடுவதற்கு முன்பு அதில் அடங்கியுள்ள விவரங்களை- வழக்கறிஞர்கள் மூலமாக நீதிபதிக்கு விளக்குவோம் என்கிறார் மிஸ்ரா. ராஜீவ் கொலை வழக்கு குற்றவாளி பேரறிவாளனின் வழக்கறிஞர் எஸ்.பிரபு இதை மறுக்கிறார். சென்னை சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவர் இந்த சீலிடப்பட்ட அறிக்கைகளை திறந்து பார்க்கத் தாம் விரும்பவில்லை என்று கூறியதாக வழக்கறிஞர் பிரபு தெரிவிக்கிறார்.

இது 2013 இல் நடந்த சம்பவம். ராஜீவ் கொலைக்கு உதவியாக இருந்தவர்கள் பல ஆண்டு காலம் சிறையில் வாடு கிறார்கள். முக்கிய சந்தேகித்துக்குரிய குற்றவாளிகள் இறந்து விட்டனர். அல்லது பிடிபடாதவர்களாக இருக் கிறார்கள். அதே நேரத்தில் எம்.டி.எம்.ஏ. வும் செலவு அதிகம் பிடிக்கும் விசாரணையைத் தொடர்ந்து கொண் டுள்ளது. இந்த விவகாரம் முக்கியத்துவம் மிக்கதாக இருந்தபோதும் தலைமை நீதிபதியோ விசாரணைக் கமிசனுக்கு கால வரம்பை நிர்ணயிக்கவில்லை.

**மொழியாக்கம் :**
**அருள்மொழி கற்பகவிநாயகம்**

**செய்திகளில் சில மாறுபாடுகள் இருப்பினும் கட்டுரையின் சாரம் கருதியே வெளியிடப்படுகிறது.**

# தலைமைக் கழக அறிவிப்பு

அன்பு தோழர்களுக்கு வணக்கம்.

14.10.2018 அன்று திருப்பூரில் நடைபெற்ற கழகச் செயலவையின் தீர்மானங்களை நினைவூட்டுகிறோம்.

அவற்றின் நிறைவேற்றம், முன்னேற்றம், கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் குறித்து ஆயவும், கலந்துரையாடவும் முதற்கட்ட பயணம் ஒன்றினை திட்டமிட் டுள்ளோம். இப்பயணத்தில் கழகத்தலைவர், பொதுச் செயலாளர், தலைமைக் கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

**மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் – 2018 பட்டியல்**

21.11.2018 - புதன் காலை - ஈரோடு வடக்கு - மாலை - ஈரோடு தெற்கு; 22.11.2018 - வியாழன் காலை - நாமக்கல் - மாலை திருப்பூர்; 23.11.2018 - வெள்ளி காலை - கோவை மாநகர் - மாலை கோவை புறநகர் (ஆனைமலை); 24.11.2018 - சனி காலை - திண்டுக்கல் (பழனி) -மாலை - திருச்சி, பெரம்பலூர், அரியலூர் (திருச்சி); 30.11.2018 - வெள்ளி காலை - சேலம் கிழக்கு- மாலை - சேலம் மேற்கு; 02.12.2018 - ஞாயிறு காலை - தர்மபுரி - மாலை - கிருட்டிணகிரி; 07.12.2018 - வெள்ளி காலை - கடலூர் - மாலை நாகபட்டினம்; 08.12.2018 - சனி காலை - திருவாரூர் (மன்னை) - மாலை - தஞ்சாவூர், புதுக்கோட்டை (பேராவூரணி); 09.12.2018 - ஞாயிறு காலை - சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர் (மதுரை); 15.12.2018 - சனி மாலை - குமரி; 16.12.2018 - ஞாயிறு காலை - தூத்துக்குடி - மாலை - நெல்லை.

திட்டமிடப்பட்டுள்ள நாள்களில் அந்தந்த மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள், மாவட்ட கலந்துரையாடலை ஏற்பாடு செய்து, விவரத்தை தலைமைக் கழகத்துக்கு விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**ஆய்வுப் பொருள்கள்:**

1. பெரியார் முழக்கம், நிமிர்வோம் உறுப்பினர் சேர்க்கை. 2. கழகக் கட்டமைப்பு நிதி. 3. டிசம்பர் 24, பெரியார் நினைவு நாள், திருச்சி-உரிமை மீட்பு கருஞ்சட்டைப் பேரணி, மாநாடு. 4. மாவட்ட கழகம் புதுப்பித்தல்.

இப்பயணத்தின் மாலை கலந்துரையாடல் நடைபெறும் ஊர்களின் பொதுக் கூட்ட ஏற்பாடுகள் குறித்து பரப்புரைச் செயலாளர், தலைமைக் கழகச் செய லாளர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

விடுதலை இராசேந்திரன்
பொதுச் செயலாளர்

கொளத்தூர் மணி
– தலைவர்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 15th November 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN